2022 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 177, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S.R. *இராஜா அவர்கள். மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

177—

அங்கன்வாடி மையம்

***60—திரு. S.R. இராஜா:**

மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *தாம்பரம் மாநகராட்சி, 33–வது மற்றும் 37–வது வார்டுகளில் நவீன அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) *மற்றும்* (ஆ) *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள, தாம்பரம் நகராட்சி 33 மற்றும் 37–வது* ward*–களில் இருந்த பகுதிகள், தாம்பரம் நகராட்சிப் பகுதிகள், மாநகராட்சியாக உயர்த்தப்பட்ட பின்பு, அம்மாநகராட்சியில் 51–வது* ward *பகுதியில் அமைந்துள்ளன. அம்மாநகராட்சியின் 51–வது* ward *பகுதியில், பழைய தாம்பரம் பகுதியில் ஒரு குழந்தைகள் மையமும், தங்கவேலு தெருவில் ஒரு குழந்தைகள் மையமும் செயல்பட்டு வருகின்றன. இந்த இரண்டு மையங்களுமே சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்களுக்குத் தேவையான மின் வசதி, கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, நவீன சமையல் அறை வசதி, எரி வாயு இணைப்பு, எரி வாயு அடுப்பு,* cooker *மற்றும் சமையல் மேடை ஆகியவை உள்ளன. அதுமட்டுமல்லாமல் சுவர்களில் குழந்தைகளைக் கவரும்வகையில் நல்ல வண்ணப்படங்கள் வரையப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால், இப்பகுதியில் புதிதாக நவீன குழந்தைகள் மையம் அமைக்கவேண்டிய அவசியம் தற்போது இல்லை.*

[2022 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்கள்.

திரு. S.R. இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த வினாவைத் தொடுக்கின்ற நேரத்தில், அது நகராட்சிப் பகுதியாக இருந்தது. இப்போது மாநகராட்சிப் பகுதியாக வார்டு 51 ஆக, மாறியிருக்கின்ற காரணத்தினால், இந்த ஓராண்டில் நமது அரசு இந்த அடிப்படைப் பணிகளையெல்லாம் செய்திருப்பது, மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது.

ஆகவே, இதேபோல, தாம்பரத்திலே 40 அங்கன்வாடி மையக் கட்டடங்கள் இருக்கின்றன. கட்டடங்கள் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. அதையும் நம்முடைய அரசாங்கம் இந்த இரண்டு அங்கன்வாடி மையங்களைப்போல, தாம்பரத்தில் தேவையான உபகரணங்களை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன்– மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு மையக் கட்டடங்களுமே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்களால்தான் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. ஆகவே, அவர் கூறியதுபோல, அங்கே 40 அங்கன்வாடி மையங்களில் பழுதான நிலையில் உள்ள, பராமரிக்கப்படவேண்டிய நிலையில் உள்ள மையங்களை நிச்சயமாக இந்த அரசு சிறப்பு கவனம் எடுத்து சட்டமன்ற உறுப்பினர் நிதியின்மூலமும் மற்றும் பல்வேறு துறைகளின்மூலமும் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்கள்.

திரு. S.R. இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதியில் Sanatorium பகுதியில், நம்முடைய சமூக நலத் துறைக்குச் சொந்தமான பல ஏக்கர் இடங்கள் பயன்படாத நிலையில் இருக்கின்றன. தாம்பரத்தில் இடம் கிடைப்பது என்பது மிக அரிதாக இருக்கிறது. இருக்கிற இடத்தை நல்லமுறையிலே பயன்படுத்திக்கொள்வதற்கு, பல சமூக ஆர்வலர்கள் Rotary சங்கம், அரிமா சங்கம், பல வியாபாரிகள்

2022 ஏப்ரல் 26]

சங்கம், இதுபோல இருக்கின்ற சங்கங்களைப் பயன்படுத்தி, அந்தப் பகுதியில் இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்கு, அதுவும் குறிப்பாக பெண்களுக்கு training institute *போல, அமைத்துத் தந்தால் இன்னும் சரியாக இருக்கும். குறிப்பாக நாட்டிலே, 158* million *குழந்தைகள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். முன்னாள் அமைச்சர்* T.T. *கிருஷ்ணமாச்சாரி அவர்களுடைய இல்லத்திலே,* SOS Children's Village *என்ற ஒரு* village *இருக்கிறது. ஏழை குழந்தைகளைப் பராமரிக்கிறார்கள். ஏழை குழந்தைகள் என்று சொல்வதைவிட, அம்மா, மகன், குழந்தை போல ஒரு அன்போடு பராமரிக்கிற* SOS Children's Village*-ஐப்போல வேறு எங்கும் இருக்குமா என்று எனக்கொரு சந்தேகம். இந்தியாவிலே இதைத் தவிர வேறு எங்கேயும் இதுமாதிரி இருக்கமுடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை நேரடியாகச் சென்று பார்வையிட வேண்டும். பல்வேறுபட்ட நலத் திட்டங்களைச் செய்துகொண்டிருக்கிற நம்முடைய அரசு, இதேபோல தமிழ்நாடு முழுவதும் அமைத்துத்தர முயற்சிப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தொகுதியில், சேலையூர் பகுதியில், சமூக நலத் துறைக்கான இடங்கள் இருக்கின்றன. அதை தொண்டு நிறுவனங்கள்மூலம் மேம்படுத்திட, குழந்தைகள் மற்றும் பெண்கள் நலனுக்காகப் பயன்படுத்த முடியுமா என்ற ஒரு கேள்வியை வைத்தார்கள். அதை துறை ஆய்வு செய்து பரிசீலிக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.*

அதேபோல, SOS Village*-ஐத் தாங்களே பார்வையிட்டு, அதைப்போல ஓர் அமைப்பை உருவாக்கவேண்டும் என்றும் கூறினார்கள். அதையும் நிச்சயமாகப் பார்வையிட்டு, அது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

முற்பகல் 10–30

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வடக்கு, சட்டமன்றத் தொகுதியிலுள்ள,*

மாநகராட்சிப் பகுதியிலே 6-வது ward, 7–வது ward, 23–வது ward, கோல்டன் நகர் பகுதிகளில் அங்கன்வாடி மையம் தேவைப்படுகிறது. நாங்களும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டிக்கொடுத்துள்ளோம். அங்கே போதிய இடவசதி உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கன்வாடி கட்டடத்தை அமைத்துத் தர முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வடக்கு தொகுதியில், திருப்பூர் மாநகராட்சி வார்டு எண் 6, 7 மற்றும் 23–வது வார்டுகளில் உள்ள கட்டடங்களுக்கும் புதிய நவீனமயமான அங்கன்வாடி கட்டடங்கள் கட்டித் தர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைக்கிறார்கள். நிச்சயமாக அதற்கு இந்தத் துறை, அரசு அதிகாரிகளோடு இணைந்து கட்டித்தர நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைர் தலைவர்: *வினா வரிசை எண் 178, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

178—

மீன் உலர் கூடம்

***3107—திரு. ஓ.எஸ். மணியன்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) வேதாரண்யம் தொகுதி, வானவன்மகாதேவி கிராமத்தில் மீன் வலை பின்னும் கூடம் மற்றும் மீன் உலர் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

ஆ) ஆம் எனில், எப்போது?